(Pages : 4) **N – 4121**

Reg. No. : ............................

Name : ................................

**First Semester B.Com. Degree Examination, June 2022**

**First Degree Programme under CBCSS**

**Language Course - Additional Language - Tamil**

**TM 1111.2 - IKKAALA TAMIL - I**

**(2020 Admission onwards)**

Time : 3 Hours Max. Marks : 80

I. **அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு தொடர்களில் விடையளி

1. பாரதியார் எப்போது பிறந்தார்?
2. பாரதிதாசனின் எந்த நூலுக்குச் சாகித்ய அகாதமி விருது கிடைக்கப் பெற்றது?
3. ந. பிச்சமூர்த்தியின் இயற்பெயரென்ன?
4. வெண்ணிலாவின், "பட்டுப்பூச்சிகளைத் தொலைத்த ஒரு பொழுதில்" என்ற சிறுகதையின் மையக்கரு யாது?
5. திணைத்துணை நன்றியைப் பனைத்துணையாக்கியதாக சிற்பி, தனது கவிதையில் எதனைக் குறிப்பிடுகின்றார்?

பொருத்துக.

6. மரப்பாச்சி - சுகிர்த ராணி
7. எஞ்சோட்டுப் பெண் - ஜெயமோகன்
8. அறம் - உமா மகேஸ்வரி
9. மேரியின் ஆட்டுக்குட்டி - தமிழச்சி தங்கபாண்டியன்
10. இரவு மிருகம் - தி.ஜானகிராமன்

**(10 × 1 = 10** மதிப்பெண்கள்**)**

P.T.O.

VTM NSS COLLEGE LIBRARY

II. எவையேனும் **எட்டு** வினாக்களுக்கு **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. "ஊரைக் கூட்டிக் / கொள்ளையடித்தனர் / கல்யாணம்" -இக்கவிதை எழுதியவர் பெயரை எழுதி கவிதையின் பொருளை விளக்குக.

12. "வார்த்தைகளை அடியில் போட்டு உட்கார்வது மட்டும் அதிக சுகமாயிருக்கிறது" இக்கவிதையினைக் குறித்தெழுதுக.

13. பெருமாள் முருகன் - சிறு குறிப்பு வரைக?

14. கவிமணியின் தமிழ்ப்பணியினைக் குறிப்பிடுக.

15. கேரளத்தின் சிறப்புகளாகச் சிற்பி கூறுவதென்ன?

16. 'அச்சமில்லை' எனும் கவிதையில் பாரதி கூறுவன யாவை?

17. எஸ்.ராமகிருஷ்ணனின் வாழ்க்கைக் குறிப்பினை எழுதுக.

18. "அந்நியமான உறவு" குறித்து கவிஞர் புதிய மாதவி கூறுவது யாது?

19. அம்மாவின் இறுதிச் சடங்கிற்கு வரமுடியாததற்குக் காரணமாக, மரணம் டாட் காம்' கவிதையில் கூறப்படுவது என்ன?

20. நீரன்றி அமையாது உலகு' கவிதையில் மாலதி மைத்ரி கூறுவன யாவை?

21. ந.பிச்சமூர்த்தியின் "காதல்" எனும் கவிதையின் உட்பொருளை ஆராய்க?

22. ஔவையார் குறித்து முத்துநிலவன் கூறுவன யாவை?

23. **"Haste makes waste"** என்ற ஆங்கிலப் பழமொழியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்.

24. "அகத்தின் அழகு முகத்திலே" - இப்பழமொழியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.

25. எழுத்தாளர் பாமா எழுதிய இரண்டு படைப்புகளை எழுதுக.

26. கவிஞர் சுகதகுமாரியைக் குறித்தெழுதுக.

**(8 × 2 = 16** மதிப்பெண்கள்**)**



VTM NSS COLLEGE LIBRARY

III. எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு **ஒரு பக்க அளவில்** விடை தருக.

27. "வேண்டும்" என்ற பாரதியார் கவிதையைக் குறித்தெழுதுக.

28. எஸ்.ராமகிருஷ்ணனின் கட்டுரையைத் திறனாய்க.

29. கவிமணியின் விண்ணப்பம் கவிதையின் பாடுபொருளை எழுதுக.

30. "மேரியின் ஆட்டுக்குட்டி" எனும் சிறுகதையில் கூறப்படும் செய்திகளைத் தொகுத்தெழுதுக?

31. வெண்ணிலாவின், "ஈரப்பிசுபிசுப்பு" கவிதையை மதிப்பிடுக.

32. "அறம்" என்ற கதையின் மையக்கருத்தை விவரி?

33. பாடப்பகுதியில் உள்ள பெண் கவிஞர்களின் கவிதையில் காணும் உடலரசியலைக் குறித்தெழுதுக.

34. சினேகத்துக்கு என்ன நிறமுள்ளதாகக் கவிஞர் வெளிப்படுத்துகின்றார்?

35. "திருட்டு" கதையில் காணும் சமூகச் சிக்கல்களை ஆராய்க.

36. "பொன்னுத்தாயி" எனும் சிறுகதையைக் குறித்துப் பெண்ணிய நோக்கோடு எழுதுக?

37. உமாமகேஸ்வரியின் சிறுகதையில் காணும் சமூகப் பிரச்சனையை விவரிக்க.

38. இரவு "மிருகம்" கவிதை உணர்த்தும் செய்தி யாது?

**(6 × 4 = 24 மதிப்பெண்கள்)**

IV. எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு **கட்டுரை வடிவில்** விடை தருக.

39. இன்றைய தமிழில் பெண் கவிதைகள் எனும் கட்டுரையில் காணும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

40. தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பொருத்தமான தலைப்பு கொடுக்கவும்.

மேற்குத் தொடர்ச்சி மலை, இந்திய துணைக்கண்டத்தின் மேற்புறத்தில் அரபிக்கடலுக்கு இணையாக அமைந்துள்ள தொடர்மலையாகும். மேற்குத் தொடர்ச்சி மலை அரபிக்கடலில் இருந்து வரும் குளிர்ந்த காற்றைத் தடுத்து அதன் மேற்பகுதியில் அமைந்துள்ள கேரளா மற்றும் மேற்கு கடற்கரையில் நல்ல மழையைத் தருகின்றது. இதனால் இம்மலைத்தொடரின் கிழக்குப்பகுதியிலுள்ள தக்காணப் பீடபூமி குறைந்தளவு மழைப்பொழிவையே பெறுகிறது. உலகில் பல்லுயிர் வளம் மிக்க எட்டு இடங்களில் மேற்குத் தொடர்ச்சி மலைகளும் ஒன்றாகும். இங்கு சுமார் 5000 வகை பூக்கும் தாவரங்களும், 139 வகை பாலூட்டிகளும், 508 வகை பறவைகளும், 176 வகை இருவாழ்விகளும் உள்ளன.

VTM NSS COLLEGE LIBRARY

இம்மலைத்தொடர் மராட்டியம், குசராத் மாநிலங்களின் எல்லையில் உள்ள தபதி ஆற்றுக்கு தெற்கே துவங்கி மராட்டியம், கோவா, கருநாடகம், தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களின் வழியாகச் சென்று கன்னியாகுமரியில் முடிவடைகிறது. இதன் நீளம் சுமார் 1600 கிலோமீட்டர்கள். இதன் சராசரி உயரம் 900 மீட்டர்கள். இம்மலைத் தொடர் மராட்டியம், கர்நாடகத்தில் சாயத்ரி மலைத்தொடர் எனவும் தமிழகத்தில் ஆனைமலை, நீலகிரி மலைத்தொடர் எனவும் கேரளாவில் மலபார் பகுதி, அகத்திய மலை எனவும் அழைக்கப்படுகிறது. இம்மலைத்தொடரின் உயரமான சிகரம் கேரளாவிலுள்ள ஆனைமுடி (2.695 மீ) ஆகும். இதுவே தென்னிந்தியாவின் உயரமான சிகரமும் ஆகும்.

தென் இந்தியாவின் பல முக்கிய ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உருவாகுகின்றன. இங்க உருவாகி கிழக்கு நோக்கி தக்காண பீடபூமி வழியாகப் பாய்ந்து வங்காள விரிகுடாவில் கலக்கும் முக்கியமான ஆறுகள் சில கோதாவரி, கிருஷ்ணா, காவிரி மற்றும் தாமிரபரணி, இவை தவிர பல சிறு ஆறுகள் இம்மலைத் தொடரில் உருவாகி மேற்கு நோக்கி பாய்ந்து அரபிக்கடலில் கலக்கின்றன. புவியியல் ரீதியாக மேற்குத் தொடர்ச்சி மலைத்தொடர் அரபிக்கடலிற்கு அருகில் அமைந்துள்ளதால் மேற்கு நோக்கிப் பயும் ஆறுகள் சிறிய ஆறுகளேயாகும். அவற்றுள் சில முல்லை பெரியாறு, சிட்லாறு, பீமா ஆறு, மணிமுத்தாறு, கபினி அறு, கல்லாவி ஆறு, பெண்ணாறு மற்றும் பெரியாறு ஆகும். இந்த ஆறுகளின் குறுக்கே பல அணைகள் கட்டப்பட்டு பாசனத்திற்கும், சாகுபடிக்கும் மற்றும் மின்சாரம் தயாரிப்பதற்கும் உதவுகின்றன. மகராட்டினத்தில் உள்ள கோபாளி அணை, கோய்னா அணை, கேரளாவில் உள்ள பரம்பிகுளம் அணை, தமிழ்நாட்டில் உள்ள மேட்டூர் அணைக்கட்டு போன்றவை குறிப்பிடத்தகுந்தவைகளாகும்.

இம்மலைத் தொடரை உலகப் பாரம்பரியக் களங்களுள் ஒன்றாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. பல்லுயிர் வாழ்நிலையின் கருவூலமாக விளங்கும் மேற்குத் தொடர்ச்சி மலையைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியமாகும்.

41. அ. வெண்ணிலாவின் கட்டுரையைத் திறனாய்க.

42. "மரணம் டாட் காம்" கவிதையில் காணும் சமூக அவலத்தை விவரி?

43. பெருமாள் முருகனின் "நீர் விளையாட்டு" உணர்த்தும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

44. ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்த்துப் பொருத்தமான தலைப்பு எழுதவும்.

Subramania Bharathi was a great patriot. He began to fight for independence. His song roused the spirit of patriotism in the people and many joined the struggle for independence. The verses he composed have great literary value. They are simple and have deep meaning. Panchali Sabatham and Kuyil pattu have earned him an important place in Tamil literature. His great desire was that every indian should be a true patriot. He considered not belonging to a few people but the property of all citizens. He desired that no man in India should go without food. He wished that women should hold high degrees and titles so that they should take part in the Indian government.

**(2 × 15 = 30 மதிப்பெண்கள்)**

---



VTM NSS COLLEGE LIBRARY